நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

நேற்று முன்தினம் (19.08.2025) நிகழ்வுகள்!

1. பிரதமர் இன்டன்ஷிப் திட்டத்தின் சுணக்கத்துக்கு காரணம் என்ன?

கனிமொழி கருணாநிதி கேள்வி!

PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் செயல்படுத்தப்படும் முறை, அதில் நிலவும் தேக்கங்கள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்விகளை எழுப்பினார்.

"PM Internship எனப்படுகிற பிரதமர் இன்டன்ஷிப் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து அத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை எத்தனை?

இத்திட்டத்தை செயல்படுத்துதலில் தனியார் நிறுவனங்களுடன் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததால், PM Internship இல் குறைந்த அளவிலான இளைஞர்களே பங்கேற்கிறார்கள் என்பதை ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?

அப்படியானால் இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

இத்திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த ஆட்சேர்ப்புக்கான காரணங்களைக் கண்டறிய அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

PM Internship திட்டத்தை மிகவும் பயனுள்ள வகையில் மறுசீரமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?"

ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி கேட்டிருந்தார்.

2. மின்சார வாகன விற்பனையை ஊக்குவிக்க திட்டம் என்ன?

பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி

மின்சார வாகனங்கள் உற்பத்தியை அதிகரிக்கவும் அதன் விற்பனையை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசின் திட்டங்கள் மற்றும் இலக்கு குறித்து பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வகை வாகனங்களுக்கு ஆண்டொன்றிற்கு தேவைப்படும் சுமார் 400 ஜிகாவாட் மணிநேரம் (GWh) பேட்டரி திறன் உற்பத்திக்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன? பேட்டரி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் முக்கிய கனிமமான லித்தியத்தின் தேவை உலகளாவிய அளவில் அதிகரித்து வருகிறது. அதை கருத்தில் கொண்டு சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மேம்பட்ட அமைப்பில் உள் நாட்டில் பேட்டரி ஆராய்ச்சி அமைப்பை உருவாக்க அரசின் திட்டங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. மாம்பழ கூழுக்கு 12% ஜிஎஸ்டி வரி என்பது அநியாயம்!

பி. வில்சன் குற்றச்சாட்டு

மாம்பழ கூழ் மீதான 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அதன் உற்பத்தியை மோசமாக பாதித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டி மாநிலங்கலவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். ஜிஎஸ்டி வரியை 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் நெடுநாள் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலிக்காதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

4. மின்கழிவுகள் மூலம் ஈட்டிய ஜிஎஸ்டி தொகை எவ்வளவு? அதை முறைப்படுத்தும் நடவடிக்கைகள் என்ன?

திருச்சி சிவா கேள்வி

மின்சாரம் மற்றும் மின்னணுக் கழிவுகள், பேட்டரி கழிவுகள் துறைகளில் பிரித்தெடுத்தல், மறுசுழற்சி செய்தல், துண்டாக்குதல் அல்லது புதுப்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஜிஎஸ்டியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் முறையான மறுசுழற்சி முறையில் ஈட்டிய ஜிஎஸ்டி வரித் தொகை எவ்வளவு? மறுசுழற்சித் துறையில் முறைசாரா அல்லது பதிவு செய்யப்படாத ஆபரேட்டர்களால் ஏற்படும் வருவாய் இழப்பு எவ்வளவு? மின்-கழிவு மற்றும் பேட்டரி கழிவு மறுசுழற்சிக்கான முறைப்படுத்துதலை ஊக்குவிப்பதற்கும் வரி தவிர்ப்பைக் குறைப்பதற்கும் அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன? அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய் எவ்வளவு எனவும் அவர் கேட்டுள்ளார்.

5. தோல்வியில் முடிந்ததா மேக் இன் இந்தியா திட்டம்?

ஜி.செல்வம் - சி.என்.அண்ணாதுரை கேள்வி

தமிழ்நாட்டில் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் துறை வாரியாக தொடங்கப்பட்ட மொத்தத்திட்டங்களின் எண்ணிக்கை குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் செல்வம் மற்றும் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டங்களின் செயல்பாடு குறித்து அரசு நடத்தியுள்ள ஆய்வுகள் என்ன? அதேபோல் மேக் இன் இந்தியா திட்டத்தின்கீழ் ஏற்பட்ட தாமதங்கள் அல்லது ரத்து செய்யப்பட்ட திட்டங்கள் எவை? தமிழ்நாட்டில் இந்த முயற்சியின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆனால் பயன்படுத்தப்படாமல் உள்ள தொழில் துறை வளாகங்கள் அல்லது சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZ) யாவை? மேலும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த அரசிடம் உள்ள செயல்திட்டங்கள் என்ன என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

6. கிராமப்புறங்களில் புற்றுநோய் பரிசோதனை மையங்களுக்கான செயல் திட்டம் என்ன?

டாக்டர் கனிமொழி சோமு கேள்வி

அனைத்து கிராமப்புறங்களிலும் புற்றுநோய் பரிசோதனை மையங்களுக்கான செயல் திட்டத்தின் நிலை குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் செயல்படும் புற்றுநோய் பரிசோதனை மையங்களின் எண்ணிக்கை என்ன? கிராமப்புறங்களில் புற்றுநோய் பரிசோதனை நடத்துவதில் மருத்துவர்கள், துணை செவிலியர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் (CHOS) உள்ளிட்ட மருத்துவ நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்க அரசின் திட்டம் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

7. பட்டியல் சாதி மக்களுக்கான நிதியை பயன்படுத்தாதது ஏன்?

ஆ.இராசா எம்.பி. கேள்வி

பட்டியல் சாதியினரின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தப் பட்டதற்கான காரணங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், எஸ்சி துணைத் திட்ட மேம்பாட்டு செயல் திட்டத்தின் கீழ், ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்கள், மேலும் எஸ்சி-களின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் முதலிய தகவல்களை எம்.பி. ஆ. இராசா கேட்டுள்ளார்.

8. இலக்கை அடைகிறதா மஞ்சள், ஜமக்காள ஏற்றுமதி?

ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி

2019-20 முதல் 2024-25 வரை ஒவ்வொரு ஆண்டும் ஈரோட்டில் இருந்து மஞ்சள் மற்றும் பவானியில் இருந்து கம்பளங்கள் ஏற்றுமதி செய்த விவரங்கள் கேட்டு ஈரோடு திமுக மக்களவை உறுப்பினர் பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்கூறிய ஒவ்வொரு தயாரிப்பு வகைகளுக்கும் அதன் ஏற்றுமதி அளவுடன்களிலும் அதன் மதிப்பு கோடியிலும் வெளியிட வேண்டும், இந்த தயாரிப்புகளுக்கு 2025-26 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதி இலக்குகள் மற்றும் அவற்றை அடைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? சர்வதேச சந்தைகளில் இந்த ஜிஜ-டேக் செய்யப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட முயற்சிகள் யாவை என்றும் அவர் கேட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2025) கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, சென்னை, பெசன்ட் நகர் மயானத்தில் அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

கழகத் தலைவர் ஆணைப்படி தகவல் தொழில்நுட்ப அணியின்

அண்ணா அறிவகம் District Firewall ! - மற்ற மாவட்டங்களிலும் விரைந்து தொடங்கிடுக!

தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

சென்னை, ஆக. 21-

கழகத் தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் நம் திராவிட நாயகன் அவர்கள் உத்தரவுப்படி கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் மாவட்டங்கள்தோறும் அண்ணா அறிவகம் District Firewall தொடங்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்துடனான கழகப் பணிகள் மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு, கழகத் தலைமைக்குத் தரவுகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

தகவல் தொழில்நுட்ப அணியின் அண்ணா அறிவகம் திறப்பு விழாக்களில் நான் நேரில் பங்கேற்பதைக் கடமையாகக் கொண்டுள்ளேன் என்பதை அறிவீர்கள். கடந்த ஞாயிறன்று (ஆகஸ்ட் 17) மதுரையில் தொடங்கப்பட்ட மூன்று District Firewall , நிகழ்வின் போது, மறைந்த எனது தாயார் மருத்துவமனையில் இருந்ததால் என்னால் நேரில் கலந்து கொள்ள முடியவில்லை என்றாலும், இந்நிகழ்வை சிறப்பாக நடத்திய மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சேடப்பட்டி மணிமாறன், மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி ஆகியோருக்கு நன்றியையும், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்களான சுரேஷ், பிரபு ஆகியோருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் District Firewall பணிமனைகளை திறப்பதற்கு முழுவீச்சாக பணியாற்றி வரும் துணைச் செயலாளர் சுரேஷுக்கு பாராட்டுகள்.

தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் கடந்த வாரம் தொடங்கப்பட்ட District Firewall ல் பணியாற்றும் 13 பேரும் பெண் உடன்பிறப்புகளாக இருப்பதைப் பார்த்த போது மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயபாலன் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், திராவிட மாடல் ஆட்சியின் இலட்சிய நோக்கத்துடன் மற்ற மாவட்டங்களின் District Firewall களிலும் பெண் உடன்பிறப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாலின சமத்துவத்தை நிலைநாட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை District Firewall தொடங்கப்படாத மாவட்டங்களின் பட்டியல் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அவரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு, கடலூர் வடக்கு, திருச்சி மத்தியம், திருச்சி வடக்கு, பெரம்பலூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, இராமநாதபுரம், விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, காஞ்சி வடக்கு, விழுப்புரம் தெற்கு, கோயம்புத்தூர் மாநகர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, நீலகிரி, சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தெற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை மேற்கு, திருவள்ளூர் மத்தியம், திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு ஆகிய இந்த மாவட்டங்களில் விரைவாக District Firewall அமைக்கும் பணியை நிறைவு செய்ய வேண்டும் என்றும், பணிகள் பெருமளவு நிறைவேறியும் இன்னும் திறக்கப்படாமல் உள்ள தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருப்பூர் கிழக்கு, ஈரோடு மத்தியம், கரூர், திருவண்ணாமலை வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, சேலம் மத்தியம், தர்மபுரி கிழக்கு, வேலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் மிக விரைவாகத் District Firewall திறப்பு விழா நடைபெற வேண்டும் என்றும் கழகத் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை கவனத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் அண்ணா அறிவகம் District Firewall இந்த வாரத்தில் முழுமையாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

அரியலூர், ஆக.21–

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியம், நமங்குணம் ஊராட்சியில் உங்களுடன் 'ஸ்டாலின் திட்டம்' முகாம்கள் நடைபெறுவதை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு, அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்து கொண்டார்.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறை சேவைகள் திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம், 15.07.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்றையதினம் செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நமங்குணம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகிலும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துளாரங்குறிச்சி ஊராட்சி, சூரியமணல் கிராமத்திலும், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோவிலூர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகிலும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்கள் நடைபெற்றது.

அந்தவகையில் அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குழுமூர், நமங்குணம் மற்றும் வஞ்சினபுரம் ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து நமங்குணம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகிலும் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்படுதல், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், மருத்துவச் சேவைகள் அளிக்கப்படுவதையும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், இன்றையதினம் நடைபெற்ற முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் தகுதியான நபர்களுக்கு வருவாய்த் துறையின் சார்பில் 06 பயனாளிகளுக்கு வகுப்புச் சான்றுகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு விதை தொகுப்புகளையும், சுகாதாரத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், 02 பயனாளி களுக்கு மக்களைத் தேடி மருத்துவப் பெட்டகங்களையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் ஊட்டச்சத்து காய்கனி தொகுப்புகளையும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

மேலும், 14.08.2025 அன்று ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு உட்பட்ட 1, 2, 11 ஆகிய வார்டுகளுக்கு ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகத்திலும், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரியநாகலூர், புதுப்பாளையம் மற்றும் ரெட்டிப்பாளையம் ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து வி.கைகாட்டி, இராமரமணி மஹாலிலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறவுள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ.ரா.சிவராமன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், பொன்.செல்வம், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும்

மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகர்மன்றத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற கழக நகர்மன்றத் தலைவர் வெ.கௌசல்யா தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.விடம் வாழ்த்துப் பெற்றார். உடன் நகரச் செயலாளர் மு.பிரகாஷ், ஒன்றியச் செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பெரியதுரை உள்பட பலர் உள்ளனர்.

விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியத்தில்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 21–

செஞ்சி ஒன்றியம் தேவதானம் பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' "திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் தேவதானம் பேட்டை ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், பிரபா சங்கர் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் அன்னமயில் ஜெயராமன் அனைவரை வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமைத் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களையும், பழ விதைகளையும், மக்கள் நல் வாழ்வு மற்றும் மருத்துவத் துறை சார்பில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய், சர்க்கரை, நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து மாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வழங்கினார்.

முகாமில் தேவதானம் பேட்டை, மணலப்பாடி, வி.நயம்பாடி, சின்ன பொன்னம்பூண்டி, ரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றியச் செயலாளர் விஜயராகவன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, மாவட்டக் கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றியக் கவுன்சிலர்கள் சீனிவாசன், புவனா செந்தில்குமரன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஜெயபாலன், மண்ணு, கலா அன்பழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமி அனைவருக்கும் நன்றி கூறினார்.

தேனி வடக்கு மாவட்டம் தேனி நகராட்சி 32, 33 ஆகிய வார்டுகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் ஆதரவற்ற குழந்தைக்கு உதவித்தொகைக்கு மனு அளித்தனர். அதிகாரிகள் விசாரணை செய்து 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் உடனுக்குடன் ஆதரவற்ற குழந்தைக்கு உதவித்தொகை ஆணையை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் வழங்கினார். உடன் நகர் மன்றத் தலைவர் ரேணு பிரியா, துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம், கவுன்சிலர் கடவுள், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுதந்திரம், நகர இளைஞரணி அமைப்பாளர் அரவிந்த், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் விசுவாமணி, தாசில்தார் சதீஷ்குமார் மற்றும் அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.